Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00


கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா
ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 06 (04.10.2003) சனிக்கிழமை இதழ்:04



சிதைந்த நிலையில் மோட்டார் சைக்கிளும் அதில் வந்தவர்களும்.



மோதிய இராணுவ வாகனத்தை சூழ்ந்து ஆர்ப்பாட்டம் செய்யும் பொதுமக்கள். (மேலும் படங்கள் 2 ஆம் பக்கத்தில்) படங்கள்: மதன், சர்வேஸ்.

## பல்கலை மாணவி எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!

பருத்தித்துறை - முதலாம் கட்டைச் சந்தியில் வீட்டில் தனித்திருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் எரிந்த நிலையில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட முகாமைத்துவ மாணவியான அரியமுதராசா கார்த்திகா (வயது 22) என்பவரே எரியுண்ட நிலையில் அவருடைய வீட்டின் ஒரு அறையிலிருந்து மீட்கப்பட்டார்.

குறிப்பிட்ட வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் - தண்ணீர்த்தாங்கியடிப் பகுதியில்

# இராணுவ வாகனம் மோதி இருவர் பலி; படையினருக்கெதிராக மக்கள் கிளர்ச்சி!

### கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

**கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வந்த இராணுவ வாகனம் நேற்று யாழ்.தண்ணீர்த் தாங்கி பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பிரயாணம் செய்த இரு இளைஞர்கள் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக மரணமடைந்தனர். இந்தச் சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த மக்கள், அப்பகுதியில் திரண்டு படையினருக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடு பட்டனர். இதன்போது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல்களை படையினர் நடத்தினர்.**

நேற்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது -

கோண்டாவில் அன்னங்கையைச் சேர்ந்த மகாலிங்கம் லிங்கரூபன் (வயது 21) என்பவரும், இவருடன் பிரயாணம் செய்த சாவகச்சேரியைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளி ஒருவரும் பரிதாபகரமாக மரணமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சுண்டிக்குளி நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவத்தினருடைய டிரக் வண்டி எதிரே வந்த மோட்டார் சைச்கிளுடன் மோதுண்டது. இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் சுமார் ஐம்பது மீற்றர்வரை இழுத்துச் செல்லப்பட்டனர். இவர்களது தலைப் பகுதி சிதைவடைந்து சிதறிய நிலையில், வாகனம் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து பத்து மீற்றர் தூரத்தில் சடலம் காணப்பட்டது.

இந்த இருவரினதும் சடலத்தை பிறிதொரு இராணுவ வாகனம் மூலம் படையினர் எடுத்துச் சென்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துவிட்டு, மீளவும் சம்பவ இடத்திற்கு வந்து, இராணுவ வாகனத்தை அந்த இடத்திலிருந்து அகற்ற முற்பட்டதையடுத்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படை பெண் சிப்பாய் சுருக்கிட்டுத் தற்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை கடற்படைத் தளத்தில் கடமையாற்றும் பெண் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று காலை 10.30 மணியளவில் சுருக்கிட் டுத் தற்கொலை செய்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை அமெரிக்க அரசு நீடித்தது!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை அமெரிக்கா நீடித்துள்ளதுடன், புதிய சர்வதேச பயங்கரவாத பட்டியலிலும் இணைத்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், வருடத்திற்கு ஒருமுறை இப்பட்டியல் மீளாய்வு செய்யப்படுவதாயினும், எந்த வேளையிலும் இந்தப் பட்டியலிலிருந்து ஒரு அமைப்பின் பெயரை நீக்க அமெரிக்க அரசுக்கு அதிகாரமுண்டு. அந்த வகையில், விடுதலைப் புலிகள் அமைப்பு வன்முறைகளைக் கைவிட்டதாக அமெரிக்கா கருதும் பட்சத்தில், உடணடியாக அவர்களின் பெயரை நீக்க முடியுமென்றும், அடுத்த வருடம் ஒக்ரோபர் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலை ஒவ்வொரு வருடத்தின் ஒக்ரோபர் மாதமும் அமெரிக்க அரசு மீளாய்வு செய்து, ஓர் புதிய பட்டியலை வெளியிடுவது வழமை என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் தடை நீடிப்பு எமக்கு கவலை அளிக்கிறது!

### அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்

(கிளிநொச்சி)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்ற நல்ல சூழலில், அமெரிக்கா மீண்டும் விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்துள்ளமையானது எமக்கு மிகவும் கவலை அளிக்கின்றது என விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நேற்று தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் நேரத்தில் அமெரிக்கா இந்த முயற்சியை மேற்கொண்டது கவலையான விடயந்தான். ஆனாலும் கடந்த காலங்களில் எங்கள் மீது அமெரிக்கா தடைவிதித்திருந்தபோதும் எங்கள் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. காலத்துக்குக் காலம் நாங்கள் மேற்கொள்கின்ற சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வரவு செலவுத்திட்டத்தை தோற்கடித்து

## ஐ.தே.க அரசைக் கவிழ்க்க பொ.ஐ.மு இரகசியத் திட்டம்!


இந்த வருடம் நவம்பர் மாதம் ஐ.தே.காவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்ட அறிக்கையை தோற்கடித்து ஐ.தே. கட்சியின் ஆட்சியை கலைத்து பொ.ஐ.முன்னணி ஆட்சி அமைக்க இரகசியத் திட்டம் தீட்டிவருகின்றமை தெரியவந்துள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

சந்திரிகாவின் தலைமையில் பொ.ஐ.முன்னணி மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் இந்த முயற்சிக்கு கொள்கையளவில் ஆதரவளிக்க ஜே.வி.பி.யும் இணக்கம் தெரிவித்துள்ளது.

நிதியறிக்கையை தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்ற ஜே.வி.பியின் ஆதரவு போதாதெனவும் இதற்கு ஈ.பி.டி.பி.யின் ஆதரவைப் பெறுவதுடன் பேரியல் அஷ்ரப்பின் தலைமையிலான கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மலையக கட்சியான இ.டபிள்யூ சி.கட்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்





தடை எடுக்கவேண்டிய நேரத்தில தடை விதிக்கிறது வேடிக்கையாயிருக்கு...

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291


எக்ஸ்போஎயார்
வான் வெளியில்

# யாழ். தண்ணீர்த்தாங்கியடியில் இடம்பெற்ற கோரவிபத்தின் சில காட்சிகள்...







## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கலைப்பீடப் பரீட்சைகள்.

பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்தினால் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் 2002/2003&2002/2003(A)
   கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கானது.
   விண்ணப்ப முடிவுத்திகதி 15/10/2003
2. இரண்டாம், மூன்றாம் ,நான்காம் வருட முதலாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் (செயல்முறைப் பாட அலகுகள்) 2002/2003
   இரமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் ,மூன்றாம் வருட இசை , நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடங்களுக்கும், நான்காம் வருட சித்திரமும் வடிவமைப்பும் பாடத்துக்குமான செயன்முறைப் பாட அலகுகளுக்கான பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் 08/10/2003 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
03/10/2003.

(சி-1637)


## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

கண்டாவில் நிரந்தர பிரஜாவுரிமையுடன் வசிக்கும் பல்கலைக்கழக மாணவிக்கு பெற்றோர் 31-35 வயதிற்கு இடைப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். மணமகன் பொறியியலாளர் அல்லது கணக்காளராக இருப்பது விரும்பத்தக்கது. தொடர்புக்கு:- S.சிவநாதன், மே/பா K.செல்வகுலசிங்கம், புதுவளவு வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (494)

### வீடு விற்பனைக்கு

543,545, கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- S.சிவநாதன், மே/பா K. செல்வகுலசிங்கம், புதுவளவு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (495)

### சித்திரக் கலை O/L,A/L

வார நாட்களில் சித்திரபாட துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகிறது. நேரம் 3.30-5.30. இவற்றுடன் பெண் அலங்காரம், கேக்ஐசிங், உடை அலங்காரம் என்பவற்றுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அருண் கலைக்கூடம்,தேவாலய வீதி, சண்டிலிப்பாய். குககிருபை (மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்) யாழ் வீதி, மானிப்பாய். (497)

## முத்துதம்பி மகா வித்தியாலய

# பாடசாலை கட்டடத்தை ஒப்படைக்க ஆசிரியர் கலாசாலையினர் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இதுவரை காலமும், தற்காலிகமாக இயங்கி வந்த பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையினர், அந்தப்பாடசாலையின் கட்டடங்களை நிபந்தனைகளின் அடிப்படையில், இந்த வருட இறுதிக்குள் கையளிக்க முன்வந்துள்ளனர்.

இதன்படி கலாசாலையினர் பயன்படுத்தும் கட்டடத்தொகுதிகளின் நீளமான மண்டபத்தை நாளை மறுதினமும்,' நூலக மண்டபத்தினை இந்த மாதம் 31 ஆம் திகதியும், ஏனைய மண்டபங்களை இந்த வருட இறுதியிலும், கையளிப்பதற்குப் பாடசாலை அதிபர் கே.சதாசிவமூர்த்தி முன்வந்துள்ளார்.

இந்தப் பாடசாலையின் மண்டபங்களைப் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கக்கோரி, பாடசாலை மாணவர்கள் - கடந்த சில தினங்களாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்திவந்தமை தெரிந்ததே.

## உதைபந்தாட்டப் போட்டியில் முதலாமிடம்

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில், குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்-14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு ஆகிய பிரிவுகளில் முதலாம் இடத்தினைப் பெற்று, வலயமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 18 வயதுப் பிரிவிற்கான போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## சனசமூக நிலைய நிர்வாகசபை தெரிவு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையத்தின் 2003/2004 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு, கடந்த மாதம் 28 ஆம் திகதி சனசமூக நிலைய மண்டபத்தில், தலைவர் நா.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

இந்த நடப்பு ஆண்டிற்கான புதிய தலைவராக மீண்டும் நா.திருநாவுக்கரசு தெரிவுசெய்யப்பட்டதுடன், செயலாளராக மு.கணேசானந்தனும், பொருளாளராக ச.கஜமுகனும், உபசெயலாளராக சி.சிவதீபனும், உபதலைவராக தா.பாலசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன், நிர்வாகசபை உறுப்பினர்களாக மேலும் 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.


## கௌரி மிதிவண்டி-காலணி வாணிபம்

தரம் மிகுந்த மிதிவண்டிகள் (LUMALA,HERO) உதிரிப்பாகங்கள், நவ நங்கையர்கள் விரும்பும் காலணி வகைகள் பெற்றோமாக்ஸ் மற்றும் உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஒரு இடம்

கௌரி மிதிவண்டி-காலணி வாணிபம்




உரிமையாளர் - க.பேரானந்தன்
பருத்தித்துறை வீதி நெல்லியடி,
கரவெட்டி.

முக்கிய குறிப்பு:-
முன்பு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்திருந்த கௌரி மிதிவண்டி-காலணி வாணிபம் தற்போது பருத்தித்துறை வீதியில் நெல்லியடிச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ளது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்.
426 (302), K.K.S. Road,
Jaffna.
(சி-1636)

ராஜா யாழ்ப்பாணம்.
பிரசாந், கிரண், நடித்த
வின்னர்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)
(சி-1619)

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜய்,ரம்பா, குஷ்பு நடித்த
மின்சாரக் கண்ணா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
STRATEGIC COMMAND
(சி-1618)

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் பெருவளர்ச்சி

## மத்திய வங்கி பிரதி ஆளுநர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், நாட்டின் பொருளாதாரம் 5.6 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜயவர்த்தன தெரிவித்தார்.

யுத்தநிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதனால் ஏற்பட்ட சாதகமான சூழலும், பெருமளவு புதிய பொருளாதார முதலீடுகளுமே பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாகவுள்ளன. அத்துடன், ஆக்கபூர்வமான பொருளாதார முன்னெடுப்புக்களும் இதற்கு ஒரு காரணமாகும்.

இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில், மொத்த உள்ளூர் உற்பத்தி 5.6 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இது அரசின் சமாதான முன்னெடுப்புக்களாலும், திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளினாலுமே ஏற்பட்டுள்ளது.

அத்துடன், கைத்தொழில்துறை உட்பட பல்வேறு துறைகளின் பங்களிப்புக்களும் இந்த வளர்ச்சிக்கு காரணமாகவுள்ளதுடன், கடந்த காலாண்டு காலகட்டத்தில் நாடு பாரிய வெள்ள அனர்த்தத்தைச் சந்தித்துள்ளபோதும், பொருளாதாரத்தின் இந்த வளர்ச்சிநிலை ஒரு சாதனையென அவர் மேலும் தெரிவித்தார்.

# புகையிரதம் தடம்புரண்டதில் ஐந்து இலட்சம் ரூபா நஷ்டம்!

## புகையிரத திணைக்கள சிரேஷ்ட அதிகாரி தெரிவிப்பு

கொம்பனி வீதி, புகையிரதத் திணைக்களத்தில் - புகையிரதமொன்று பாதையை விட்டு விலகியது. சதிநாச வேலையாக இருக்கலாம் என்று புகையிரதத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இதுபற்றிய விசாரணையை சி.ஐ.டி. பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இதனால் புகையிரத திணைக்களத்துக்கு ஐந்து இலட்சத்துக்கு மேல் நஷ்டமேற்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

புகையிரதம் பாதையை விட்டு விலகியதற்கு- வேலைநிறுத்தம் செய்த ஊழியர்கள் காரணமல்ல என்று, புகையிரத தொழிற்சங்க உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். விசாரணை செய்து, உரியவரைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமாறு, இந்தத் தொழிற்சங்க உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு லயன் கழகத்தினால் அன்பளிப்புப் பொருட்கள்

(திருகோணமலை)

சிறுவர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை சன்சிற்றி மிலேனியம் லயன் கழகத்தினர் - பாடசாலை உபகரணங்களை கல்வி பயிலும் சிறுவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

திருகோணமலைக்கு வடக்கே 9 கி.மீ தொலைவிலுள்ள ஆத்திமேடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் சென்ற லயன் கழகத்தினர், அங்கு 75,000 ரூபா பெறுமதியான பாடாசலை உபகரணங்களை லயன் தலைவர் ஆர்.நவரத்தினமூடாக மாணவர்களுக்கு வழங்கினர்.

லயன் கழகத்தினரை, அவர்களது இந்தச் செயலுக்காகப் பாராட்டிய பாடசாலை அதிபர், இந்தப் பாடசாலை அமைந்துள்ள இடம் மக்கள் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியேறிய பிரதேசமாகும். இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மிகவும் வறிய நிலைக்குட்பட்டவர்கள். எனவே, மாணவர்களது நன்மை கருதி, லயன்ஸ் கழகத்தினராகிய நீங்கள் இந்தப் பாடசாலைக்கு விளையாட்டு முற்றம் ஒன்றையும், சிறுவர் பூங்கா ஒன்றையும் அமைத்து தரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (04)

# நாடாளுமன்ற இயற்கைச் சூழலைக் காக்க அரசு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## அமைச்சர் அஸ்வர் வேண்டுகோள்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் இயற்கைச் சூழல் அண்மைக் காலமாக மாசடைந்து வருவதைத் தடுத்து நிறுத்த, அரசு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தைச் சுற்றிவர 1110 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள தியவன்னா ஓயா உள்ளது. இந்த வாவியிலுள்ள சைபீரியன் வாத்து என்னும் வகையை சேர்ந்த பட்சிகள், அங்கு செல்வோரால் அழிக்கப்படுகிறது. இவை அந்தப் பகுதிக்குச் சொந்தமான உயிரினங்கள் ஆகும்.

எனவே, இந்த இயற்கை சுற்றாடலை பாதுகாக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், அஸ்வர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்துக்கு முன்னாலுள்ள சுற்றாடலில் குப்பை கூழங்களை கொட்டவேண்டாம் என்று அறிவித்தல் பலகை போடப்பட்டிருந்தும், மககள் குப்பை கூழங்களைக் கொட்டி வருகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரவிந்தவிடம் விவாகரத்துக்கோரும் மனைவி

(கொழும்பு)

கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வாவின் மனைவி சரிதா - விவாகரத்துக்கோரி, வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்கில், சரிதா விவாகரத்துப் பணமாக 5 கோடி ரூபாவை நட்டஈடாகவும், ஜீவனாம்சமாக மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவையும் கோரியுள்ளார்.

அதேவேளை, ஒன்றரை வயது மகனை கணவன் பாதுகாப்பிலேயே ஒப்படைக்குமாறு சரிதா மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அரவிந்தவும், சரிதாவும் 1999 ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திருமணம் செய்துகொண்டனர்.

இவர்களுக்கு 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆண் குழந்தையொன்று பிறந்தது. அரவிந்த டி சில்வாவுடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாகவே, சரிதா விவாகரத்துக் கோரி, வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசைக் கவிழ்க்க பிரதமர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

பிரதமர் ரணில்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதன்மூலம், தற்போதைய அரசைக் கவிழ்க்கப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி திட்டமொன்றை வகுத்துள்ளது.

ஜனாதிபதியின் நேரடி அறிவுறுத்தலின் பேரிலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 33 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள் எனப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியளிக்கும் பட்சத்தில், புதிய அரசின் பிரதமராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அல்லது தற்போதைய வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ நியமிக்கப்படலாம் எனவும், ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

தற்போதைய அரசை கவிழ்ப்பதற்கு, எதிர்க்கட்சிகள் எடுத்துவரும் முயற்சிகளின் ஒரு வடிவமே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

# தப்பிச்சென்ற இராணுவச் சிப்பாய் புலிகளுடன் இணைவதற்கு விருப்பம்

படையிலிருந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவர், விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்துக்கு வந்து, தான் இயக்கத்தில் இணையப்போவதாகத் தெரிவித்த சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம், வவுனியா படைமுகாமில் இருந்து தப்பியோடிய பிரியங்க ஆரியரத்ன என்ற சிப்பாயே, விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையப் போவதாக - மனித உரிமை ஆணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

அவிசாவளையைச் சேர்ந்த இந்த இராணுவச்சிப்பாய் - கடந்த மாதம் 30 ஆம் திகதி வவுனியாவிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்க அரசியற்துறை அலுவலகத்திற்கு வந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆனால், விடுதலைப் புலிகள் இவரது கோரிக்கையை நிராகரித்துள்ளார்கள்.

போர்நிறுத்தக் கண்காணிப்பு பிரதிநிதிகளுடாக, மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகளிடம் விடுதலைப் புலிகளால் கையளிக்கப்பட்டார். தான் மீண்டும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டால் - பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படலாம் என்று அந்தச் சிப்பாய் மனித உரிமை ஆணைக்குழுவிடம் தெரிவித்தார்.

இவரைப் பாதுகாப்புடன் வீட்டுக்கு அனுப்பிவைப்பதற்கு, மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.


# தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

பொதுத் தேர்தலில் முஸ்லிம்கள் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால், அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணையவேண்டுமென, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்து அதனூடாக முஸ்லிம் மக்களின் விடிவிற்காக பாடுபட்டவர் அமைச்சர் அஷ்ரப். தற்போது முஸ்லிம் காங்கிரஸ் பல பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்பது வேதனைக்குரிய விடயமாகும். அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதற்கு - பிரிந்து நிற்கும் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

முஸ்லிம் கட்சிகள் வெவ்வேறு குழுக்களாக நின்று தேர்தலில் போட்டியிடுவதால், அதிக ஆசனங்களைக் கொண்ட ஒரு குழுவின் தலைவராக - என்னால் நாடாளுமன்றம் செல்லமுடியாத நிலை ஏற்படும். எனவே, அனைவரும் இணைந்து நிற்பதன் மூலம் பலமான ஒரு குழுவின் தலைவராக என்னைப் பாராளுமன்றம் அனுப்பவேண்டும் எனவும் ஹக்கீம் கேட்டுக்கொண்டார்.



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" எனும் நூல் வெளியீட்டு விழாவின்போது பொதுச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதிகளுள் ஒருவரான பிரதாபன் ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

# தடைப்பட்ட சமாதான பேச்சுக்கள் மூன்றுவார காலத்தினுள் ஆரம்பம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

தற்போது தடைப்பட்டுள்ள அரசிற்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகள் - இன்னும் மூன்று வார காலத்தினுள் மீண்டும் ஆரம்பமாகும் எனத் தெரிவித்தார் அமைசசர் போராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

சமாதானத்தில் பெண்களின் பங்கு என்னும் தலைப்பில், கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனை, தற்போது நாடுமுழுவதுமே அனுபவித்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணி, நாட்டிலே தற்போது நிலவும் அமைதிச்சூழலை மட்டுமல்ல, நாட்டிலுள்ள அனைத்து சமூகங்களும் சமாதானம் நீடிக்க பாடுபடவேண்டும்.

இடைக்கால அரசு தொடர்பாகப் புலிகள் தயாரித்துள்ள திட்டவரைபு - மிகவிரைவிலே நோர்வேயூடாக எம்மிடம் கையளிக்கப்படும். நீண்டகாலமாகவே நாட்டிலே ஏற்பட்டுவந்த கொடிய போருக்கும், இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாண வேண்டியவேளை நெருங்கிவிட்டது. தற்போதைய சந்தர்ப்பம் முக்கியமானது மட்டுமல்ல, இறுதியானதும்கூட. எனவே, இதனை எல்லோரும் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம்- எப்போதும் முறிவடைந்துவிடக் கூடிய சாத்தியமுள்ளது. அந்த நிலை உருவாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடையுமாக இருந்தால், தற்போது சீரடைந்துவரும் பொருளாதாரம் மீண்டும் சீர்குலையக் கூடும்.

நாட்டின் அபிவிருத்தி, சமாதானச் செயற்பாடுகள் அனைத்திலும் பெண்களுடைய பங்களிப்பு மிக முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் இன்று மகளிர் சங்கம நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்ட மகளிர் சங்கம நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. முள்ளியவளை வித்தியாணந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் - முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரம் பெண்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் அரங்காற்றுகை நிகழ்வு, கருத்தரங்குகள், சிறப்புரைகள், குழுநிலை ஆய்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

முல்லை மாவட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு, அதற்கான தீர்வுகளும், முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்களும் ஆராயப்பட்டவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இறுதியாக, கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

# பெண்கள் எவருக்கும் சளைத்தவர்களல்ல

# பெண்களால் முடியாதென்பது கிடையாது

## மகளிர் சங்கமத்தில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

பெண்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல. ஒவ்வொரு பெண்களும் தமக்குள்ளே இருக்கும் தாழ்வு மனப்பான்மையில இருந்து வெளியே வரவேண்டும். பெண்களால் முடியாது என்பதே கிடையாது என, யாழ் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் சங்கம நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

வாழ்க்கையில் நாங்கள் திசைதெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்று யாழ்.குடாநாட்டிலே பல பகுதிகளிலேயிருந்து பெண்கள் ஒன்றாகக்கூடி, இந்தச் சங்கம நிகழ்வுக்கு வந்திருப்பது மெச்சத்தக்கது, பாராட்டத்தக்கது.

ஆளுமை என்பது ஒரு மனிதனை எது அவனாக அல்லது அவளாக நிர்ணயிக்கிறதோ அதுதான் அவனுடைய அல்லது அவளுடைய ஆளுமை ஆகும்.

எனவே இந்த ஆளுமையைப் பொறுத்த அளவிலே, பெண்களும் ஆண்களும் சில வேற்றுமைகளை தங்களுடைய உடல்ரீதியாக, உளரீதியாகக் கொண்டிருப்பினும், சில பொதுவான அம்சங்கள் அவர்களுக்கென்று சிறப்பாக இருக்கிறது.

எங்கள் சமுதாயத்திலே - பல காலங்களுக்கு முன்னர் பெண்களை இழிவாக, தாழ்ந்தவர்களாக சமூகம் நடத்தி வந்தது. ஆனால், இன்று காலம் மாறிவிட்டது. பெண்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் தங்களுடைய ஆற்றல், வல்லமை, கொடைகள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி, தங்களால் இந்தச் சமூகத்திற்குரிய திட்டங்களைத் தீட்டுவதற்கு அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நாங்கள் ஒருவருக்கும் சளைத்தவர்கள் அல்ல, நாங்களும் ஆண்களுக்குச் சரிசமமாக எங்களுடைய பண்புகளிலே, எங்களுடைய வளர்ச்சிகளிலே இருக்கிறோம் என்ற கருத்தை இந்த சங்கமம் விளக்குகிறது.

புராணங்களிலும், இதிகாசங்களிலும், இலக்கியங்களிலும் பெண்களைப் போற்றுகிறார்கள். ஆனால், அந்தப் போற்றுதலுக்குரிய வளர்ச்சியை இன்று நாம் காண முடியாதிருக்கிறது. அவர்கள் அவ்வாறு சொல்லிச் சொல்லியே பெண்களை வைத்திருக்கிறார்களே தவிர, பெண்கள் தமது தலைமைத்துவத்தைப் பெறக்கூடிய முறையையும், தாங்களாகவே சிந்திக்கக்கூடிய வலிமையையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

பெண்களுடைய கதைகளை, பிரச்சினைகளை, வேதனைகளை, இன்னல்களைக் கேட்பதற்கு ஒருவரும் இல்லாமலிருக்கிறார்கள். அவ்வாறான பெண்களுக்கு, இப்படியான சங்கமத்தின் மூலம் தங்களுடைய வாழ்க்கையைத் தாங்களே அமைப்பதற்கேற்ற ஒரு சூழலை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

இப்பொழுது பெண்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தால், பெண்களுக்குத் தன்னம்பிக்கை இல்லை. தாங்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நினைப்பு இன்னும் வரவில்லை. அந்தத் தன்னம்பிக்கை, வல்லமை, ஆற்றல், திறமை வரவேண்டும்.

இந்த நிகழ்வானது உங்கள் எண்ணங்களிலே, உங்கள் வாழ்க்கைப் பாதையிலே ஒரு சிறந்த இடமாக, சிறந்த நிகழ்வாக இருக்கட்டும்.

உங்களுடைய வாழ்வுக்கு நீங்கள்தான் பொறுப்பு. உங்கள் தலைமைத்துவம், உங்கள் விழுமியம் என்பவற்றை நீங்கள்தான் வளர்க்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.



நெல்லியடி மகாவித்தியாலயத்தில் 6ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழி மூலக்கல்வி போதனைத் திட்டத்தினை வடமராட்சி வலய ஆங்கில வள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதந்தரமூர்த்தி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் ஆசிரியர் தினவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஆசிரியர் தினத்தை - கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விமரிசையாகக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய் கிழமை பி.ப. 2 மணிக்கு, தமிழர் ஆசிரியர் சங்கத்தின யாழ்.மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில், தமிழர் ஆசிரியர சங்கத்தின் பொதுச் செயலாளரும், சார்க் ஆசிரிய தொழிற்சங்கங்களின் தலைவருமான த.மகாசிவம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

உலக ஆசிரிய தினத்தை முன்னிட்டு தமிழ் ஆசிரியர்களுக்கிடையே நடந்த கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குரிய பரிசில்களும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

### நிர்வாகக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகக்கூட்டம் - நாளை காலை 8.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து நிர்வாகசபை அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு யாழ்.மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.




## யாழ்ப்பாணத்தில் இலவச கணினி பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தில், முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் முற்றிலும் இலவசமான கணினிப் பயிற்சி நிலையமொன்று நிறுவப்படவுள்ளது.

லண்டனிலுள்ள ஸ்ரீ கனக துர்க்கையம்மன் நம்பிக்கை நிதியம், வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் பிரதேசங்களில் வசதி குறைந்த மாணவர்களும் கணினிக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கென, மாணவர்களிடமிருந்து எந்தவகையிலும் நிதி அறவிடப்படாத வகையில் "லண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் இலவச கணினிப் பயிற்சி நிலையம்" என்ற பெயரில் கணினிப் பயிற்சி மையமொன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஒழுங்குகளையும், தொடர்ந்து நிலையத்தை நிர்வகிப்பதற்குமான பொறுப்பினையும் - தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு மேற்கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் கல்வி கற்க விரும்பும் வசதி குறைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் மாணவர்கள் இலவசமாகக் கற்பதற்கு உரித்துடையவர்கள் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும் எனவும், விண்ணப்பப் படிவங்களையும், ஏனைய விபரங்களையும் இல 64, கின்னர் லேன், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள மேற்படி பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பயிற்சிநிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

### நூல் அறிமுக வழா

(நவிண்டில்)

கொழும்பு இந்துக் கல்லூரியில், அண்மையில் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், தனது 42 வருட பல்கலைக்கழகச் சேவை அனுபவங்களை மையமாக வைத்து ஆக்கப்பட்ட "ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும், கல்விச் சிந்தனைகளும்" என்ற 260 பக்கங்கள் கொண்ட நூலினை வெளியிட்டுள்ளார்.

இந்த நூலினைக் கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிமுகம் செய்து வெளியிட்டு வைப்பதற்கான, முன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகச் சங்கத் தலைவர் ஆசிரியர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

## திருமுறைகள் அடங்கிய ஒலிப்பேழை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருநெறிய தமிழிசை வெளியீட்டு கழகத்தினால், நாளை "திருமுறைத் தேனமுது" எனும் ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. நல்லூரிலுள்ள கம்பன் கோட்டத்தில், காலை 9 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறவுளளது. இந்த விழாவில், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலபாடத்துறை விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி பிரதம விருந்திராகக் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிவான் மு.திருநாவுக்கரசு கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஒலிப்பேழைக்குத் திருமுறை பாடியிருக்கும் திருஞானசம்பந்தனினது பண்ணிசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இதற்கு முன்பாக, திருமுறைகள் அடங்கிய ஐந்து ஒலிப்பேழைகள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விவசாயிகளுக்கு கடன் உதவி

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினைப்பிரதேச விவசாய சம்மேளனத்தினூடாக, விவசாயிகளுக்கு ஹற்றன் நஷனல் வங்கி கடனுதவி வழங்கவுள்ளதாக தெரியவருகிறது. இதற்கு முன்னோடியாக விவசாயிகளிடம் பயிர்ச்செய்கை நிலத்தின் மொத்தப் பரப்பு, பயிரிடப்படும் பயிரின் விபரம் உள்ளிட்ட விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்காக சம்மேளனத் தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கடன், பயனாளி ஒருவருக்கு 25,000 ரூபா முதல் 40,000 ரூபா வரை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுள்ளது. மேலும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, விவசாய சம்மேளனத்திற் குப்பட்ட முப்பது பயனாளிகளுக்கு, கடந்த வருடமும் ஹற்றன் நஷனல் வங்கி கடனுதவி செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

## புன்னாலைக் கட்டுவன் பகுதிகளுக்கு வெகு விரைவில் மின்விநியோகம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, பிரதேச மக்களுக்கு மின்சாரம் வெகு விரைவில் வழங்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

இதற்காக புன்னாலைக்கட்டுவன் தெற்கிலிருந்து தொடர்ச்சியாக உயர் மின் அழுத்த, மின் இணைப்புகள் இணைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் மின்மாற்றி பொருத்துவற்கான ஏற்பாடுகளும மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடுகள் முடிவடைந்தவுடன், பாவனையாளர்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இம் மின் இணைப்பிகள் செல்லும் திசையில் காணப்பட்ட 40 இற்கு மேற்பட்ட பனைமரங்களும் வேறு பயன்தரு மரங்களும் புன்னாலைக்கட்டுவன் தெற்கில் தறிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### அச்சுவேலியில் செபமாலை பேரணி

அச்சுவேலியிலுள்ள புனித சூசையப்பர் ஆலயத்தில் நாளை செபமாலைப் பேரணி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்குப் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமாகி, பஸ் நிலையத்தினூடாகப் புனித சூசையப்பர் ஆலயத்தை இப்பேரணி சென்றடையும். பேரணியின் நிறைவில் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அதிவணக்கத்துக்குரிய அருட்தந்தை J.நிக்கிலஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி இடமபெறும்.


# வார்த்தை விளையாட்டு

### இடமிருந்து வலம்

1. வியப்பை வெளிப்படுத்தும் ஒரு சொற்றொடருக்குப் பயன்படுத்தப்படும் குறியீடு.
3. பின்பற்று.
5. அடர்த்தியான காடுகளில் விரைவாகப் பரவி விடும் நெருப்பு.

### மேலிருந்து கீழ்

2. மனதில் கொள்ளும் தீர்மானம்.
4. அதிகப்படியான வெளிச்சம்.
6. ஒன்றினை முடிவு செய்தல்.




### சென்ற வார வினாக்களுக்கான விடைகள்

1. அதிகாலை.
2. திராட்சை.
3. சைகை.
4. கைமாறு.
5. மாமிசபட்சினி.
6. பக்கபலம்.

# விடுகதைகளும் விடைகளும்


1. சிறுதூசு விழுந்ததும் குளமே கலங்கியது. அது என்ன?
2. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?
3. பறிக்கப் பறிக்க பெரிதாகும். அது என்ன?
4. காவலுக்கு வீரன், காக்கிச்சட்டை அணிய மாட்டான். அவன் யார்?
5. கண்ணால் காணலாம் ஆனால், கையால் பிடிக்க முடியாது. அது என்ன?
6. வீட்டுக்குள் வீடுகட்டி, வீட்டையே கொள்ளையடிப்பான். அவன் யார்?
7. ஆளில்லா வீட்டிலே வாய்பேசாத, உயிரில்லாத காவலாளி அவன்யார்?
8. பூத்தபோது மஞ்சள், காய்ந்தபோது சிவப்பு, பழுத்தபோது கறுப்பு. அது என்ன?

## பறவைகள் வாழ்நாட்கள்

| பறவைகள் | வாழ்நாட்கள் (ஆண்டுகள்) |
|---|---|
| 1. அண்டங்காகம் | 69 |
| 2. நெருப்புக் கோழி | 40 |
| 3. ஆந்தை | 68 |
| 4. மயில் | 20 |
| 5. கழுகு | 50 |
| 6. புறாக்கள் | 35 |

கு. மனிமாறன்
தரம் :10
ஹாட்லிக்கல்லூரி.

## தேனீ மரத்திலிருக்கும் கூட்டுக்குப்போக வழிகாட்டுங்கள்




# விளையாட்டு

மாலைப்பொழுதில் வீட்டு விறாந்தையிலோ, அல்லது மரநிழல்களிலோ ஆறுதலாக அமர்ந்துகொள்ளுங்கள்.

அந்திவானம், வானத்தில் ஜொலிக்கும் நட்சத்திரம், பாதையில் போகும் வாகனங்கள், பாதையில் நடந்துசெல்லும் மனிதர்கள், பறந்து திரியும் பறவைகள், வேலியில் ஓடும் ஓணான், மழையில் நனையும் மரங்கள்.... இப்படியாக உங்கள் கண்ணால் காண்பவற்றை எல்லாம் - கதா பாத்திரங்களாக்கி, கற்பனைக் குதிரையை அவிழ்த்து விடுங்கள். ஆளுக்கொரு கதை சொல்லவேண்டும். இதுதான் விளையாட்டு. உண்மையிலேயே நல்லகதை உருவானால், சிறுவர் அரங்கத்திற்கு அனுப்பி, குட்டி எழுத்தாளராகப் பேர் எடுங்கள்.

இங்கே மடிக்கவும்



# பாட்டியும் நன்றியுள்ள நாயும்



பாட்டி ஒருநாள் வடை சுட்டுக்கொண்டிருந்தாள். ஒரு காகம் வந்து, ஒரு வடையை தூக்கிக்கொண்டு - அருகில் இருந்த மரத்தில் போய் உட்கார்ந்துகொண்டது. காகத்தைத் துரத்திக் கொண்டுவந்த பாட்டி, வடையைக் கீழே போடச்சொல்லி கெஞ்சினாள். காகம் மறுத்தது.

உடனே பாட்டி மரத்திடம் சென்னாள் - "காகத்திடம் அந்த வடையைக் கீழே போடச்சொல். இல்லாவிட்டால், மரத்தில் உட்காரவிடாதே" என்று சென்னாள். மரம் - "காகம் என் நண்பன். நான் உனக்கு உதவமாட்டேன்" என்றது.


அந்தப் பக்கமாக வந்த விறகுவெட்டியிடம் பாட்டி - "அந்த மரத்தை வெட்டு. அப்போதுதான் அந்த மரத்தில் இருக்கும் காகம் என் வடையைக் கீழே போடும்" என்றாள். விறகுவெட்டி "முடியாது" என்றான்.

உடனே பாட்டி அந்த வழியாக வந்த எலியிடம் உதவி கேட்டாள். எலி உதவ மறுத்துவிட்டது. எதிரில் வந்த பூனையிடம் உதவி கேட்டாள். அதுவும் உதவ மறுத்து விட்டது. பாட்டி கவலையுடன் வீட்டிற்கே திரும்பி வந்தாள். பாட்டியின் வளர்ப்பு நாய், பாட்டியின் கவலைக்குக் காரணம் கேட்டது. பாட்டி எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னாள். உடனே நாய் வெளியில் ஓடிவந்தது.

நாய் ஓடிவருவதைப் பார்த்த பூனை - பாட்டி சொல்லித்தான் நாய் தன்னைக் கடிக்க வருவதாகப் பயந்து, ஓடியது. பூனை ஓடி வருவதைப் பார்த்த எலி, தன்னைத்தான் பூனை சாப்பிட வருகிறது என்று, எலி ஓடியது. எலி ஓடிவருவதைக் கண்ட விறகுவெட்டி - கோடாரியைக் கடிக்கத்தான் எலி வருவதாக நினைத்து, கோடரியைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

விறகுவெட்டி வருவதைக் கண்ட மரம் - பாட்டி சொல்லித் தான், தன்னைவெட்ட வருகிறான் என்று காகத்தை விரட்ட, மரம் தன் கிளையை ஆட்டியது. காகம் பயத்தில் வடையைக் கீழேபோட்டது.

வடையைப் பாட்டி எடுத்துக்கொண்டு தன் நாய்க்கு நன்றியைச் சொன்னாள்.



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### ஜேர்மனி

வாரம் தோறும் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் இந்த வாரம் இடம்பெறுவது ஜேர்மனி.

| | | |
|---|---|---|
| தலைநகரம் | - | பான் |
| மொழி | - | ஜேர்மன். |
| சமயம் | - | கிறிஸ்தவம். |
| நாணயம் | - | டோயிஷ் மார்க் |
| சராசரி ஆயுள் | - | 77.3 |
| முக்கிய நகரங்கள் | - | பெர்லின், பான், லிப்சிக், ஹெய்ல். |

வடமத்திய ஐரோப்பாவின் மிகப்பெரிய நாடு ஜேர்மன் ஆகும். ஜேர்மனி கி.மு. 500 இல் பழங்குடியினரால் உருவான நாடு. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில், கிறிஸ்தவ மத நாடானது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜேர்மனி, இரண்டாக உடைந்தது. கிழக்கு ஜேர்மனிக்கும், மேற்கு ஜேர்மனிக்கும் இடையில் அரசியல், பொருளாதாரக் கருத்து வேறுபாடுகள் காரணமாக, 1961 - இல் பெர்லின் சுவர் கட்டப்பட்டது. இதன் நீளம் 47 கி.மீ. 1990 ஆம் ஆண்டு இரு நாடுகளும் இணைந்து கொண்டதையடுத்து, பெர்லின் சுவர் இடிக்கப்பட்டது.



மாவீரன் நெப்போலியன் பிறந்தது ஜேர்மனியில்தான். இங்குள்ள கறுப்புக் காடுகள் உலகப்புகழ் பெற்றவை.

இந்த நாட்டின் முக்கிய உற்பத்திப் பொருட்களாக - விவசாயம் - பண்ணைப் பொருட்கள், கோதுமை, உருளைக்கிழங்கு.

உற்பத்தி - பதப்படுத்தப்பட்ட உணவு, மோட்டார் வாகனங்கள், மருத்துவப் பொருட்கள். கனிமம் - நிலகரி ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன.




ஜேர்மனியின் மேற்கில் பெல்ஜியம், லக்சம்பர்க் மற்றும் நெதர்லாந்து- வடக்கில் டென்மார்க்- கிழக்கில் செக்கோஸ்லேவாகியா- தென்கிழக்கில் ஆஸ்திரியா - தெற்கில் சுவிட்சர்லாந்து. தென்மேற்கில் பிரான்ஸ் ஆகியன எல்லைகளாக அமைந்துள்ளன.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
தோ.ரிக்மன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்,
வானொலி கேட்டல்.



முழுப்பெயர் :-
ய.தேவகீர்த்தனா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்,
படங்கள் சேகரித்தல்.

முழுப்பெயர் :- வெ.பிரார்த்தனா
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், விளையாட்டு,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- க.சஜீபா
கற்கும் பாடசாலை :-
தெல்லிப்பளை தந்தை செல்வா கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கவிதை எழுதுதல், பொது அறிவு.

முழுப்பெயர்:- செ.சாத்வீகன்
கற்கும் பாடசாலை :-
வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியம் மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, கல்வித்துறை.

முழுப்பெயர்:- பா.பிரதீப்
கற்கும் பாடசாலை :-
சுதுமலை தமிழ்க் கலவன் வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு.

முழுப்பெயர்:- ம.மேரிசிந்துஜா
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கல்வி, வானொலி கேட்டல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :............................
கற்கும் பாடசாலை :............................
கற்கும் தரம் :............................
வீட்டு முகவரி :............................
பிறந்த திகதி :............................
ஆர்வமுள்ள துறைகள் :............................
............................

............ ............
திகதி ஒப்பம்

............ ............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## தெரிந்துகொள்ளுங்கள்

1. பூவைப்போல தோற்றமளிக்கும் வைரஸ் எது?
எயிட்ஸ் வைரஸ்.
2. கிரிக்கெட் முதன்முதலில் தோன்றிய நாடு எது?
இங்கிலாந்து.
3. விஞ்ஞானத்தின் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?
கலிலியோ கலிலீ.
4. ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
மேரிக் கியூரி.

சி.நிதர்சன்
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

இங்கே மடிக்கவும்






# உங்கள் கைவண்ணம்




பே.தர்ஷிகா
தரம் - 7, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.



கி.காயத்ரி
தரம் - 10
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

# படித்துப் பழகுக



நல்ல நூல்களைப் படிப்பதா
நாளும் அறிவு ஊறிடுமே
மேலும் படிக்கத் தூண்டுமே
மேதினில் பழக்கம் போலுண்டோ?
நூல்கள் பலபல உண்டப்பா
சாலவும் நல்ல நூல்களையே
காலை மாலை படித்திடுவாய்
கல்வியில் பெரியோன் ஆகிடுவாய்
முன்னால் வாழ்ந்த பெரியோர்கள்
தன்னாலான நூல்கள் எல்லாம்
பின்னால் வரும் மக்களுக்குப்
பேணி வைத்தார் பெரும்பொருளாய்
பொன்னே பொன்னே வாழ்நாளைப்
பின்னே பின்னே என்று பேதைமையால்
பன்னும் பனுபலைப் படிக்காமல்
பலரும் நகைக்க வாழாதே.
வள்ளுவர் குறளை வாழ்க்கையிலே
வளமாய் நீயும் கற்றிடுவாய்
உள்ளத் தூய்மை பெற்றிடுவாய்
உண்மை நெறியில் நின்றிடுவாய்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*தூய்மை, துணைமை, துணிவுடைமை இம்மூன்றின்*
*வாய்மை வழிஉ ரைப்பான் பண்பு*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# இந்தியாவும், எதிர்க்கட்சிகளும், பீரிஸும்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான- இனப்பிரச்சினை தொடர்பான சமாதான நடவடிக்கைகள் குறிப்பாக பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் - தோல்வியடைய வேண்டுமென்பதோ அல்லது பின்னடைவு ஏற்பட வேண்டுமென்பதோ தான் சிறிலங்காவின் எதிர்க் கட்சிகளின் பெருவிருப்புடன் கூடிய பிரார்த்தனையாகும்.

இன்றைய ஆளும் கட்சி, நாளை எதிர்க்கட்சி ஸ்தானத்தில் அமர்ந்திருந்தாலும், இந்த மாதிரியான அனுகு முறையை மேற்கொள்ளும் என்பதிலும் சந்தேகமில்லை.

தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படக்கூடாது, அதுவும் அந்த மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப தீர்க்கக்கூடாது என்பதில், சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளில் பெரும்பாலானவை இறுக்கமான கொள்கைப் பிடிப்பினைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆளும்கட்சியாக இருக்கும்போது தேவைகளின் - அழுத்தங்களின், இன்னுமதிகம் நாம் தெளிவாகக் கூறுவதானால், தவிர்க்கமுடியாத அரசியல் சுயநலத்தின் அடிப்படையிலான, விருப்பற்ற விருப்பின் நிமித்தம் சமாதானம் மற்றும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஆகியவை பற்றி உரத்துக் குரல் கொடுத்து, தம்மைப் பெரும் ஜனநாயகவாதிகளாகக் காட்டுவோர் கூட, எதிர்க்கட்சி ஸ்தானத்தில் இருக்கும்போது, பெரும்பான்மை இனத்தின் விசுவாசிகளாகத் தமது சுயரூபத்தை இனங்காட்டி, அடுத்த தேர்தலின் வெற்றியை இலக்குவைத்துச் சமாதான எதிர்ப்பாளர்களாக தம்மை அடையாளப்படுத்தவே விரும்கிறார்கள்.

இதுவும் சிறிலங்காவின் ஒரு பேரினவாத அரசியல் பாரம்பரிய மரபாகவே உள்ளது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இனப்பிரச்சினையானது இவ்வளவு மோசமான குழப்பமும், குரோதமும், வெறுப்பும் விரோதமுமான நிலைக்கு மாறுவதற்கு, இந்தக் குயுக்தியான அரசியல் மூலோபாயங்களே காரணமாகும்.

இன்றைய சூழலில், சமாதானம் என்ற சொல் இது வரை காலமும் சிறிலங்காவின் உள்ளக எல்லைக்குள் மெல்ல ஒலித்தது போலன்று, அதுவும் உலகமயமாகி விட்டது என்றே கூறவேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு எண்பதுகளின் இறுதியில் ஒரு ஆதிக்க அதிகார மனோபாவத்துடன 'உரிமை' யோடு எடுத்த நடவடிக்கையும் - அந்த வரலாற்று தவறால் ஏற்பட்ட தோல்வியும் பின்விளைவுகளும், இந்தியாவுக்கு ஒரு மூக்குடைவு நிலையை ஏற்படுத்தியதையடுத்து, அது இலங்கை தொடர்பாக - 90 இற்கு பின்னான காலப்பிரச்சினைகளில் ஒட்டாததும் வெட்டாததுமான ஒரு தந்திரோபாயத்துடன் சந்தேகத்திற்குரிய உள்நோக்கத்துடனான, மர்ம நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டது.

இந்தியாவின் இந்த மௌனம், இலங்கை விவகாரத்தில் நுழைந்து, நீண்டகாலமாக இலங்கை மீதான தமது அபிலாஷைகளை இந்தியாவை மீறி நிறைவேற்ற முடியாதிருந்த, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக சமூகத்தாரை, அதற்குள் நுழைய காலத்தைக் கனிய வைத்தது.

ரணில் அரசின் பதவியேற்புடன் அந்தக்காலமும் கனிந்துவர சமாதான கோஷத்துடன் அவர்கள் உள்நுழைந்து தமது இருப்பினை வலுவாக்கிக் கொண்டனர். இது இந்தியா எதிர்பாராத ஒன்று. இந்தியாவினால் புறந்தள்ளிவிடமுடியாத ஒன்றாகவும் ஆகியது. ஆனாலும் இந்தச் சமாதான நகர்வுகள், அதனால் ஜீரணிக்கமுடியாத ஒன்றாக இருப்பதை ரணிலுக்கு எதிரான சக்திகள் மிகத் தெளிவாகவே புரிந்துகொண்டிருந்தமையால், இந்தியாவின் நீறுபூத்த நெருப்பின் நிலையிலுள்ள உணர்வுகளைத் தூண்டி அதற்கு எரிச்சலூட்டுவதன் மூலம் சமாதான நகர்வுகளை குழப்பமுயன்றன.

கதிர்காமரின் சகுனித்துவ ஆற்றல் மூலமாக, அவர்கள் அந்த நகர்வை மேற்கொண்டமை, அனைவரும் அறிந்த விடயமேயாகும்.


ஆனாலும், இந்தச் தீயசக்திகளின் முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். அவரின் இந்தக் கூற்று இந்தியா சமாதான நகர்வுகளுக்கு பூரண ஆதரவை வழங்குகின்றது எனத் தெரிவித்தபோதிலும், பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக் கட்டம் முதல், இன்றுவரை அது தொடர்பான பெறுபேறுகளை விளக்க, பிரதமர் உட்பட அமைச்சர்கள் இந்தியாவுக்கு விழுந்தடித்து ஓடி வருவதைப் பார்க்கும்போது, இந்தியா வின் அதிருப்தியின்மையை சமாளிக்க அரசு படாதபாடுபடுகின்றது என்பது தெரிகின்றது.

அரசின் இந்த இருதலைக்கொள்ளி நிலையே எதிர்க் கட்சிகளின் சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அனுகூலமாகியும் வருகின்றது. இந்தியாவுக்கு எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை வழங்கி, அதனைக் குழப்ப முயல்கிறது என்று பீரிஸ் அவர்கள் கூறுவது, கோமாளித்தனமாகவுள்ளது.

இந்தியா எந்த வகையிலும் தனது புவிசார் அரசியல் இலக்குகளை குறிவைத்தே, தனது காய்களை நகர்த் தும் என்பது, கடந்தகால அனுபவங்கள் கூறிநிற்கும் உண்மை.

இந்தியா - அரசின் சமாதான முயற்சிகளை ஆதரிக்குமா? இல்லையா? என்பது இந்தியாவுக்கு மட்டுமே தெரியும். இதுதான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

## நாடும் நடப்பும்




# இறுதித் தீர்வுக்காக எந்த நிலையிலும் புலிகளோடு பேசுவதற்கு அரசு தயார்!

## அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதித் தீர்வொன்றை அடைவதற்காக - அரசு எந்த நிலையில் இருந்துகொண்டும் புலிகளோடு பேசுவதற்கு தயாராக இருக்கிறது. இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இறுதித் தீர்வொன்றுக்கான சரியான தீர்மானம் எட்டப்பட்ட பின்னர், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்தின் அடிப்படையிலோ அல்லது புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால அரசு தொடர்பான வரைபின் அடிப்படையிலோ, பேசுவதற்கு அரசு தயாராக உள்ளது.

பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பான விடயங்கள் அடங்கிய வரைபை புலிகள் சமர்ப்பிக்கக்கூடும். ஆனாலும், அது தொடர்பாகவும் பாசீலிக்க அரசு தயாராக உள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாகவும் புலிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை, மிக விரைவில் ஆரம்பிக்கவேண்டிய அவசியம் உள்ளது. அது தொடர்பாக நோர்வே மற்றும் ஜப்பான் சமாதான தூதுவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

புலிகள் சமர்ப்பிக்கும் இடைக்கால நிர்வாக வரைபு, அரசின் கைகளை அடைந்ததும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகும். இப்பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம் மக்களின் உரிமைகள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

மிகவும் முக்கியமாக பேச்சுவார்த்தைகளில், நம்பகத்தன்மையை ஏற்படுத்தவும், மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்கவும், இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது சொந்த இருப்பிட ங்களில் குடியமர்த்தப்படவேண்டும்.

நாம் அனைவரும் நினைப்பது போன்று, தற்போது நாட்டின் நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. இறுதித்தீர்வு எட்டும் வரை நமது சமாதானத்திற்கான பயணம் தொடரப்படவேண்டும்.

இலங்கையின் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முன்நகர்வுகள், உலகின் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு வேகமாக முன்னெடுக்கப்படவில்லை என, ஐ.நா.பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியும் சாதகமான முடிவையே கொண்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமைபுரிந்து அண்மையில் நிரந்தர நியமனம் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் - நாளை காலை 10.30 மணிக்கு, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதில் அவர்களை ஆசிரிய சேவைக்கு உள்வாங்குதல் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படும் என, சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

# ஆசிரியர் தினத்தை கரிநாளாக கொண்டாடுவதற்கு அறைகூவல்

## கல்விசார் தொழிற்சங்க சம்மேளன முன்னணி விடுத்தது

(கொழும்பு)

ஆசிரியர் தினத்தை இம்முறை கரிநாளாகக் கொண்டாடுவதற்கு அனைத்து அசிரியர்களும் ஒன்றுபடுவோம் எனக் கல்விசார் தொழிற்சங்க சம்மேளன முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் எதிர்வரும் 6 ஆம் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இம்முறை இத்தினத்தை எதிர்ப்பு நாளாகக் கொண்டாடுவது எனத் தீர்மானித்துள்ளோம்.

ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் தீர்க்கப்படாதுள்ள தொழில்ரீதியான பல பிரச்சினைகளைப் பற்றிக் காலம்காலமாக வேண்டுகோள் விடுத்தும், அவற்றைத் தீர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், ஏனைய அரச சேவையாளர்களைப் போல, நாமும் வீதியில் இறங்கி எமது பிரச்சினைகளின் தீர்வுக்காகப் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது மௌனப் போக்கு காரணமாக, எமக்கு உரித்தான 50,000 ரூபா பெறுமதியான அக்ரஹாரா காப்புறுதியும், கடன் காப்புறுதியும் பறிக்கப்பட்டுள்ளது. இனி மேலும் பொறுமையாக இருந்தால், விடுமுறை உட்பட அனைத்து உரிமைகளும் பறிப்பது நிச்சயமாகிவிடும்.

ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் அதிகமானதாகும். கடந்த 9 ஆண்டு காலமாக ஆசிரியர்களின் பதவி உயர்வு நிறுத்தப்பட்டுள்ளது. தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும், ஆசிரியர் சேவையின் 1 ஆம் வகுப்புக்கு உயர்வு பெறாத ஆசிரியர்கள் பல்லாயிரம் பேர் உள்ளனர். ஆசிரியர் சேவையில் உள்ள குறைபாடுகள் இன்னும் பூரணமாகத் தீர்க்கப்படவில்லை.

வேறு மாகாணங்களில் சேவை செயயும் பல ஆசிரியர்கள், சொந்த மாகாணங்களுக்கு மாற்றம் பெறுவதற்குப் பலகாலம் கஷ்டப்படவேண்டியுள்ளது. கல்வி வழங்குவதில் உள்ள குறைபாடுகள் காரணமாக, ஏழைப்பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். உலகவங்கியின் அறிவுறுத்தலின்படி - ஆசிரியர் நியமனம், ஊழியர் நியமனம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்களுக்கு 5000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதுடன் - பதவி உயர்வுகளையும், நாட்டின் எப்பகுதியிலும் விருப்பமான பாடசாலைக்கு மாற்றலாகிச் சேவைபுரிய அனுமதியும் வழங்குவதுடன், அதிபர்களின் நிர்வாகச் செலவாக மாதம் 1000 ரூபாவை வழங்கி, ஆசிரியர் சேவையில் உள்ள குறைபாடுகளை நீக்கி, போரினால் பாதிக்கப்பட்ட ஆசிரிய சமூகத்துக்கு உரிய நிவாரணத்தை வழங்கி, மலையகப் பாடசாலைகளுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்ற பல கோரிக்கைகளை முன்வைத்தே, ஆசிரியர் தினத்தைக் கரிநாளாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர் தினத்தன்று - கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நண்பகல் 12 மணிக்கு - ஆசிரியர், அதிபர்கள் எனப் பலரும்கூடி, தீர்மானங்களை எடுக்கவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இலைமறை காயாக இருந்த கைப்பணியாளர்களை அறிமுகம் செய்துவைத்த "புத்துலகப் பிரவேசம்"

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம்- வைத்தீஸ்வராக் கல்லூரியில் கைத்தொழில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. கடந்த 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற இந்தக் கண்காட்சிக்கு வழங்கப்பட்ட பெயர் 'புத்துலகப் பிரவேசம்' என்பதாகும். வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம்- வருடந்தோறும் இத்தகைய கண்காட்சிகளை நடாத்தி வருகிறது. இந்த வரிசையில், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி - 2003 ஆம் ஆண்டுக்கான கண்காட்சி ஆகும்.



பனை மரத்தினால் வடிவமைக்கப்பட்ட தேரொன்றின் மாதிரிவடிவம்

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களின் உள்ளூர் உற்பத்தியாளர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில், பரிசுபெற்ற உற்பத்திப் பொருட்களும் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. போட்டிக்காக அனுப்பட்ட உற்பத்திப் பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. பரிசில் பெற்ற பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. முதலாவது பரிசுபெற்றவர்களைச் சிவப்பு நிறப்பட்டியாலும், இரண்டாம், மூன்றாம், சிறப்புப்பரிசு பெற்றவர்களின் பொருட்கள் முறையே பச்சை, நீலம், மஞ்சள் ஆகிய நிறப்பட்டிகளாலும் இனம் பிரித்து வைக்கப்பட்டிருந்தது.

புத்துலகப் பிரவேசத்திற்கு நாம் சென்றபோது - அங்கே முதலில் காணப்பட்ட பொருட்கள் போட்டிக்கென வைக்கப்பட்டிருந்த பொருட்களும், அவற்றுக்கிடையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற பொருட்களும் ஆகும். போட்டிக்கு வைத்திருந்த பொருட்களைப் பல்வேறு வகைகளில் எம்மால் அவதானிக்கமுடிந்தது.

போட்டிக்கென வைக்கப்பட்டிருந்த பொருட்கள் இரண்டு. வகையினதாகக் காணப்பட்டன. கைத்தறி வகையிலான பொருட்கள் ஒரு வகையைச் சார்ந்தவை. மற்றைய வகையில் அமைந்தது - கைப்பணிப் பொருட்கள் என்பவையாகும்.

கைத்தறி வகையிலான பொருட்களில், உள்ளூரில் செய்யப்பட்ட கைத்தறிப் பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன அவை இறுதிநாள் நிகழ்வில் விற்பனையும் செய்யப்பட்டன. இந்தவகைப் பொருட்களில் சேலை வகைகளும், போர்வை வகைகளும், துவாய் வகைகளும், தலையணை உறைகளின் வகைகளும், தைக்கப்பட்ட ஆடைகளும் நிறையவே இருந்தன. உள்ளூரில் கைத்தறிகளால் செய்யப்பட்ட இத்தகைய பொருட்களைப் பலர் பார்வையிட்டு, இத்தகைய பொருட்களை உற்பத்தி செய்பவர்களையும் இனங்கண்டும் சென்றனர்.

அடுத்த வகையில் அமைந்தது- கைப்பணிப் பொருட்கள் என்ற வகையினதாகும். மரத்திலான பொருட்களும், பனை உற்பத்திப் பொருட்களும், உலோகத்திலான பொருட்களும், அலங்காரப் பொருட்களும், சிற்பவேலைப்பாடுகளை உடைய பொருட்களும், தைத்த ஆடைகளும், தும்பிலான பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன.

கைப்பணிப் பொருட்களிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில், யாழ்.பொதுசன நூலகத்தின் மாதிரி ஒன்று, பனை ஓலைகளினால் செய்யப்பட்டு வைத்திருந்த காட்சியைக் குறிப்பிடலாம்.

ஆலயங்களில் இழுக்கப்படுகின்ற தேரின் மாதிரி ஒன்றைப் பனை மரத்தினால் உருவாக்கியிருந்தனர். பல்வேறு மரங்களைக் கொண்டு செய்யப்படுகிற தேர் - பனை மரத்தினால் ஆக்கப்பட்டு, அதற்கு வர்ணம் பூசப்பட்டு, அழகாக இருந்த காட்சி அனைவரையும் கவர்ந்தது. பனை மரத்தினால் பூச்சாடி ஒன்றும் செய்யப்பட்டிருந்தது. சிறிய சுழலும் வட்ட மேசை ஒன்றும் பனை மரத்தினால் செய்யப்பட்டிருந்தது.

பனை மரத்தினாலான தேர் முதலாம் பரிசினையும், பூச்சாடி இரண்டாம் பரிசினையும், வட்ட சுழலும் மேசை மூன்றாம் பரிசினையும் பெற்றிருந்தன.

சிற்பி, சோகிகளினால் ஆக்கப்பட்ட கழுகு, கிளி போன்ற பறவைகளின் உருவங்களும், இந்து ஆலயத்தின் சிறிய மாதிரி ஒன்றை சிற்பி, சோகிகளினால் ஆக்கப்பட்டிருந்ததையும் கண்காட்சியில் காணக்கூடியதாக இருந்தது.

தைக்கப்பட்ட ஆடைகள் வரிசையில் தலையணை உறைகள், சேலை வகைகள் வைக்கப்பட்டிருந்தன. சிறுவர்களுக்கான ஆடைகளும், பிறந்த இரண்டு வாரங்களில் குழந்தைகளுக்கு அணிவிக்கக் கூடிய ஆடைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தும்பினாலான பல்வேறு வகையான பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கயிறு, கால்மிதி, துடைப்பான், மெத்தை வகைகள், வீடுகளில் தொங்கவிடுகின்ற வகையில் தும்பினால் செய்யப்பட்ட உருவப்படங்களைத் தாங்கிய வகையான பொருட்கள் என்பனவற்றை குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

புலிகளின் உருவம் பொறித்த தும்பினாலான, தொங்கவிடும் படம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பொருளைக் கண்காட்சிக்கு வந்திருந்த அனைவரும் விலைகேட்டு, தாம் பெற்றுக்கொள்ள முனைந்தனர். ஆயினும், அந்த அதிர்ஷ்டம் யாரோ ஒருவருக்குச் சென்ற காரணத்தால், அந்தப் படத்தைப்பார்த்து ஏங்கிக் கொண்டு சென்றவர்களே அநேகம் பேராக இருந்தனர்.

போட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பொருடகளின் உற்பத்திகள் எவ்வாறு நடைபெறுகின்றன, அவற்றுக்குப் பயிற்சி வழங்குகிறவர்கள் எவ்வகையில் பயிற்சிகளை வழங்குகிறார்கள், பயிற்சிபெற வருபவர்கள் ஆர்வத்துடன், பயிற்சியைப் பெறுகிறார்களா? என்ற கேள்விகளுக்கு உற்பத்திப் பொருட்களுடன் நின்ற போதனாசிரியர்கள் பதில் அளித்தார்கள்.

தொழிற்துறைத் திணைக்களம் ஒவ்வொரு பிரதேசங்களிலும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும பயிற்சி நெறிகளை வழங்கிவருவதாக அவர்கள் குறிப்பிட்டனர். தையல் பயிற்சி ஒன்றை பெறும் ஒரு நபருக்கு, முப்பது ரூபா கொடுப்பனவாக வழங்கப்படுவதாகவும், நெசவுப் பயிற்சியினைப் பெறும் நபர் ஒருவருக்கு ஐம்பது ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் போதனாசிரியர்கள் தெரிவித்தனர்.

பயிற்சி நெறிகளில் பங்குபற்ற வருபவர்கள், மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சிகளில் கலந்துகொள்வதாக உடுவில். பிரதேசசபையின் நெசவு போதனாசிரியர் திருமதி வி.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்படுகின்ற பயிற்சியாளர் குறைந்த கல்வித்தரம் உடையவராகவும், அதாவது - எட்டாம் வகுப்புவரை படித்தவராகவும், வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும், 18 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

உற்பத்திச்செலவினம் கூடுதலாக இருந்தால், அப்பொருட்கள் விலை நிர்ணயம் செய்கின்றபோது, அதில் ஏற்படுகின்ற நட்டம் - தொழிற்துறை திணைக்களத்திற்கே சென்றடைகிறது. மாறாக, இலாபம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், அதுவும் தொழிற்துறைத் திணைக்களத்தையே சென்று சேருகிறது. பெரும்பாலும் நட்டம் ஏற்படுவது இல்லை என்று தொழிற்துறை திணைக்கள மேற்பார்வையாளர் கே.தர்மராஜா தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் செய்வதில் திறமையானவர்கள் இருக்கிறார்கள். முயற்சியாளர்களும் அதிகம் காணப்படுகிறார்கள். ஆனால், அவ்வாறானவர்கள் தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளுக்கு ஏன் வருவதில்லை என்பது கேள்விக்குரிய விடயமாகவுள்ளது என்று கவலை தெரிவித்தார் தொழிற்துறைத் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் ரா.தில்லைநாதன்.

இனிப்பு வகைகள், ஊறுகாய் வகைகள், அச்சாறு வகைகள், வடகங்கள், சட்னி வகைகள், வற்றல்கள் ஆகியவற்றை எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது தொடர்பான விளக்கங்களைப் புத்துலக பிரவேசக் கண்காட்சியில் பெறக்கூடியதாக இருந்தது. காரச்சீடை என்கின்ற ஒரு வகை உணவுவகையைச் செய்கின்ற முறையை விளக்கினார் ஒரு பெண். இராசவள்ளி, பீற்றூட், கரட், பூசணி ஆகியவற்றில் இனிப்பு வகைகளைச் செய்லாம் என்றும் கண்காட்சியில் விளக்கியிருந்தனர். விவசாயத் திணைக்களம் அதற்கான செய்முறை விளக்கங்களைத் தந்தது.

தொழில்நுட்ப பரிமாற்ற உத்தியோகத்தர் - தோல்பொருள் உற்பத்தி, சாயம் போடுதல், கஜூவினை எவ்வாறு உடைப்பது என்பவற்றை விளக்கினார். திருகோணமலை போன்ற வெளிமாவட்டங்களில் நடைபெறும் தோல் உற்பத்திப் பொருட்களுக்கான பயிற்சி மையத்தை, யாழ்ப்பாணத்தில் நிறுவி, அதனால் பயிற்சிபெற்று அபிவிருத்தியடைய வேண்டும் என, மட்டக்களப்பு மாவட்ட தொழில்நுட்ப பரிமாற்று உத்தியோகத்தர் த.சக்திவேல் கருத்து தெரிவித்தார்.



கண்காட்சியைப் பார்வையிடும் பொதுமக்கள்

மாவட்டம் தோறுமுள்ள சுயதொழில் முயற்சியாளர்கள், தம்மை அறிமுகம் செய்துகொள்வதற்கும், இலைமறைகாயாக இருக்கும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்களை வெளிக் கொணர்வதற்கும், உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை அறிமுகம் செய்து கொண்டு, சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் எனப் பல்வேறு நோக்கங்களை கொண்டதாக இந்த கண்காட்சி நடத்தப்பட்டதாக, யாழ்.மாவட்டத்தின் தொழிற்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் ப.இராகவன் கருத்துத் தெரிவித்தார்.

சிற்றி கனன் காமென்ஸ், தாரணி ஆட்ஸ் K.T.பிறிண்டர்ஸ், மில்க்வைற் நிறுவனம், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம், கோபாம் நிறுவனம், L.G விற்பனை நிலையம், சிங்கர் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம், T.V.S உற்பத்திப் பொருட்கள் போன்ற நிறுவனங்களும், தமது பொருட்களைப் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் இந்த புத்துலக பிரவேச கண்காட்சியில் வைத்திருந்தனர்.

இக்கண்காட்சியில் தொழிற்திறன் பயிற்சிபெற விரும்புபவர்களின் சுயவிபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களுடன் சேர்ந்து, பல பயிற்சித்திட்டங்களை உருவாக்க இனங்கண்டுள்ளதாகவும், உள்ளூர் கைப்பணியாளர்களின் தொழில்நுட்பம் வெளிக்கொணரப்பட்டுள்ளதாகவும், பொதுமககளுக்கும், கண்காட்சியில் பங்குபற்றிய நிறுவனங்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டு, புரிந்துணர்வு அபிப்பிராயங்கள் ஏற்பட வழி கிடைத்துள்ளதாகவும், சந்தை வாய்ப்புக்கு வழிசெய்யப்பட்டுள்ளதாகவும், தேசிய மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும், இவ்வாறான பெறுபேறுகளைக் கண்காட்சிகளில் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், தொழிற்துறைப் பணிப்பாளர் ஆர்.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

பூ.நகுலன்

# என்ன வரம் கேட்டாலும் தருபவன் வண்ணை நகரில் தேரேறி வருகிறான்

இன்று வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் தேர்த்திருவிழாவாகும். அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.

செந்தமிழும் சைவநெறியும் சாலபுறத் தழைத்தோங்கும் ஈழவள நாட்டின்கண் வைணவத் தலங்கள் பலவுள்ளன. இவற்றில் ஈழத்திருப்பதி என வழங்கப்படும் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ். நகரில் வண்ணைப்பகுதியில் அமைநதுள்ளது. இத்தலம் பண்டுதொட்டு நவக்கிரக வழிபாட்டுக்குப் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

இவ்வாலயத்தின் முன் வாயிலிலே ஏழு மாடங்களைக் கொண்ட நீண்டுயுர்ந்த இராஜகோபுரமும், இதன் இருபுறத்தேயும் மணிக்கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. இந்த அழகிய உயர்ந்த இராஜகோபுரத்தில், இடம்பெறும் கதை விக்கிரகங்கள் - திருமாலின் தச அவதாரத்தையும், ஸ்ரீ இராமாயண ஸ்ரீமத் பாகவத புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன.

கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வரமூர்த்தி எழுந்தருளியுள்ளார்.

நாராயணன் என்ற பெயர் எவ்வாறு வந்தது. "நாரா" என்றால், புருஷனிடத்திலிருந்து தோன்றிய பூதங்கள் முதலிய பிரபஞ்சப் பொருட்கள். "அயனன்" என்றால் அமர்ந்திருப்பவன் எனப்பொருள்படும். நாரா+அயனன் = நாராயணன் என்றானது. தன்னிடத்திலிருந்து உண்டான நூல்வலையில் சிலந்திப்பூச்சி குடியிருப்பது போன்று, தன்னிடத்திலிருந்து உண்டான பிரபஞ்சம் முழுவதும் பரமபுருஷன் அந்தர்யாமியாய் வீற்றிருக்கிறான்.

நாராயணப்பெருமாளின் பெயர்களில் ஒன்று பத்மநாபன். தாமரை போன்ற நாபியை அவன் உடையவனாயிருக்கிறான். அது சூரியன்போன்று பிரகாசமானது. அந்த நாபிக்கமலத்திலிருந்து! நான்முகன் தானாகத் தோன்றி வந்தான்.

திருமால் - சதுர்புஜம் அல்லது நான்கு திருக்கரங்களையுடையவனாயிருக்கிறான். மனிதனது ஆற்றலுக்கு அறிகுறி இரண்டு கரங்கள். அவைகளில் ஒரு கை இல்லாவிட்டாலும், அவன் பல காரியங்களுக்கு உதவாதவன் ஆகிறான். இரு கைகளையுடையவன் எதையும் செய்ய வல்லவனாகிறான். ஆயினும், மானுட ஆற்றல் அளவைக்கு உட்பட்டது. தெய்வத்தின் ஆற்றல் அளப்பரியது என்பதை நான்கு கைகள் விளக்குகின்றன.

ஒரு கையில் சங்கு வைத்திருக்கிறான். அப்பெரியபொருள் சங்கு ஊதுமிடத்து, உண்டாகும் ஒலி ஓங்காரம். ஓம் என்னும் ஓசைக்கு நாதபிரம்மம் என்று பெயர். இது ஒரு மொழியிலும், ஒரு சமயத்திலும் கட்டுப்படாதது. இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் சப்தமே ஓங்காரம். அது பிரணவம் என்றும் பகரப்படும். தன்கையில் சங்கை வைத்திருப்பதன் மூலம் தான், பிரணவப் பொருள் என்பதை அரங்கநாதன் அறிவுறுத்துகிறான்.

அரங்கநாதன் அரங்கத்தில் சயனித்திருக்கிறான். என்றாலும், அவன் ஒரு நாளும் அரங்கத்தைச் சார்ந்திருப்பவன் அல்லன். அரங்கம் அவனைச் சார்ந்திருக்கிறது. பார்வைக்குக் கண் வளர்பவன் போன்று காணப்படுகிறான். நாம் விழித்திருக்கும்போது, உலகுக்கு அடிமை. உறங்கும்போது, உறக்கத்துக்கு அடிமை.


அரங்கன் ஒன்றுக்கும் அடிமையல்லன். இதுவே அவன் உறக்கத்துக்கும் நம் உறக்கத்துக்குமுள்ள வேறுபாடு. நமக்குத் தூக்ககத்தில் எல்லாம் காரிருள். ஒன்றும் புலப்படாத நிலைமை. அகண்ட தேஜோமயம். அது எதுவென விளங்காத நமக்கு, பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாள் என்றால் ஒருவாறு விளங்குகிறது.


நம்மைப்பற்றிய உணர்ச்சி நமக்கு உறக்கத்தில் இல்லாதது போன்று ஆகிவிடுகிறது. அவனோ ஆத்மவான், சதாயோகி. தன் பூரணப் பிரக்ஞையினின்று அணுவளவும் பிசகாதவன். கண் வளர்பவன் போன்று காணப்படுகின்றான். உண்மையில் பேரறிவே வடிவெடுத்தவனாயிருக்கிறான். பரிபூரணப் பொருளாகிய அவனுடைய சந்நிதியில், உலகம் யாவும் தோன்றுதலும், நிலைபெறுதலும், நீங்குதலும் முடிவில்லாத விளையாட்டாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

காயத்தை அவனுக்கு உகந்த பெரிய கோயிலாக்கி, அவனுக்கே பணிவிடை செய்து, அவனுக்கென்று வாழ்ந்திருந்தால் - நமது மனது பாற்கடல் போன்று பொலிவுபெறும். இத்தகு பெருமைகளைக் கொண்ட நாராயணன் - யாழ்.வண்ணைப்பதியில் எழுந்தருளி, அருள் பாலிக்கிறான். இன்று அவன்தன் அன்பர்களைக் காக்க தேரேறி வருகின்றான். அவன் கழல் தொழுவோம்.

கவிமாமணி
காரை எம்.பி.அருளானந்தன்

# லைபீரியாவில் மீண்டும் போர் அபாயம்; எச்சரிக்கை விடுக்கிறார் ஐ.நா. பிரதிநிதி





(மொன்ரோவியா)

லைபீரியாவில் மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கக்கூடிய ஏதுநிலை இருப்பதாக, ஐக்கிய நாடுகளின் லைபீரியாவிற்கான பிரதிநிதி ஜக்கஸ் ஹெலின் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையினர் 3500 பேர் தற்போது லைபீரியாவில் சமாதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் அமைதியை மீண்டும் கொண்டுவரவேண்டுமாயின் - சுமார் 30 ஆயிரம் தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டும். அதற்கு கூடுதலான சமாதானப் படையினர் தேவைப்படுவதாகவும்,

ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையினர் லைபீரியாவை வந்தடைவதற்கு மூன்று மாதங்கள் தேவைப்படும் என்றும், அதுவரை தீவிரவாதிகளிடம் இருந்து ஆயுதங்களை முற்றாகக் களையமுடியாது என்றும், ஹெலின் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவரான செக்கோ கொனெக் - லைபீரிய ஜனாதிபதி பிலாவைச் சந்திக்க தலைநகர் மொன்ரோவியாவுக்கு வருகை தந்தபோது, அங்கு அரச படைகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது தலைநகர் மொன்ரோவியாவில் அமைதி நிலவிய போதும், சமாதானப் படைகள் இல்லாத இடங்களில் சிறு மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்காவின் இறுதிப் போர்க்கப்பலும் லைபீரியாவில் இருந்து வெளியேறியுள்ளது. ஆனால், விமானத் தளங்கள் தற்போதும் அமெரிக்கப் படையினர் வசமே உள்ளன. ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையினர் முழுமையான வந்ததும், அனைத்து தளங்களும் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

### மீண்டும் ஜனநாயக அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக

# சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாட பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் தீர்மானம்!

பர்மாவில் மீண்டும் ஜனநாயக ஆட்சியினை உருவாக்குவது தொடர்பாகக் கலந்துரையாட சகல அரசியல் கட்சிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளதாக, பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

இதேவேளை, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயகக் கட்சியின் தலைவி ஆங்சான் சூகியுடனும் இது தொடர்பாகப் பேசியுள்ளதாகத் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வியாழக்கிழமை பார்மாவிற்கு சென்றிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி ரசாலி ஸ்மெயில், ஆங் சான்சூகியை விடுவிப்பதற்கு மேற்கொண்ட தனது முயற்சிகள் தோல்வியடைந்தாலும், அரசிற்கும் - எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை குறைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பர்மா முன்வந்துள்ளதாக, அந்த நாட்டின் உதவி வெளிநாட்டமைச்சர் இன் மொங்வின் தெரிவித்தார்.

ஏழு படிமுறைகளைக் கொண்ட தீர்வு வரைபொன்று மிக விரைவில் வெளியிடப்படும் எனவும், பர்மாவிற்கு ஏற்றவாறு ஜனநாயக அரசு ஒன்றை உருவாக்கவுள்ளதாகவும் மொங்வின் மேலும் தெரிவித்தார்.

# ஈராக் தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கடும் எதிர்ப்பு!



ஈராக்கின் எதிர்காலம் தொடர்பாக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தத் தீர்மானம் ஈராக்கில் இறைமைமிக்க விரைவான அரசியல் தீர்விற்கு வழி வகுக்கவில்லை என பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் புதிய ஆலோசனைகள் மூலம் ஈராக்கில் உருவாகவுள்ள அரசில், ஐக்கிய நாடுகளின் பங்கு தெளிவற்றதாக உள்ளதாகவும், தான் எதிர்பார்த்த எவையும் அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்படவில்லை எனவும் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் துணையை நாடியிருந்தது. சர்வதேச படையொன்று ஈராக்கில் அமெரிக்காவின் மேற்பார்வையில் செயற்படுவதையும் எதிர்பார்த்திருந்தது. அத்துடன் ஈராக்கின் புனர்நிர்மானத்திற்குத் தேவையான நிதிக்கும் ஐ.நா. சபையின் உதவியை எதிர்பார்த்திருந்தது.

இதனிடையே ஈராக் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு தமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அமைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜனே மாக்ஷ், பாதுகாப்பு ஆலோசகர் கூட்டத்தில் தெரிவித்தார்.

# இஸ்ரேல் அமைக்கும் தடுப்புச் சுவர் தாக்குதல்களை தடுத்து நிறுத்தாது!

### ஹமாஸ் அமைப்பு தெரிவிப்பு

பலஸ்தீனத்தின் மேற்குக்கரை பிரதேசத்தில் இஸ்ரேல் படைகளால் அமைக்கப்பட்டுவரும் தடுப்புச்சுவர் தமது தாக்குதல்களை எவ்விதத்திலும் நிறுத்திவிடப்போவதில்லை என கமாஸ் போராளிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

காசா பகுதியிலிருந்து கமாஸ் விடுத்த அறிக்கையில், ஜேர்மனிய பேர்லின் தடுப்புச்சுவர் சிதைக்கப்பட்டது போன்று மேற்குக் கரையில் உருவாகும் தடுப்புச்சுவரும் சிதைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் அதிக அளவு பிரதேசத்தில் தடுப்புச்சுவரை அமைப்பதென, கடந்த புதன்கிழமை இஸ்ரேல் தீர்மானித்ததன் எதிரொலியாகவே கமாஸ் இக்கருத்தை வெளியிட்டிருந்தது.

உலக நாடுகளை இந்த தடுப்புச்சுவர் தொடர்பான பிரச்சினையில் தலையிட்டு பேச்சுவார்த்தை ஒன்றுக்கு இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்குமாறு யசிர் அரபாத் தலைமையில் பலஸ்தீன அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

3.6 மில்லியன் பலஸ்தீனியர்கள் வாழும் காசா - மேற்குக் கரைப் பகுதியில், இஸ்ரேலியப் படையினரின் பலத்த பாதுகாப்புடன் 230,000 யூதர்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



## ஊர்சுற்றி எழுதுவது

ஒக்ரோபர் இரண்டாம் திகதி காந்தி மகாத்மா பிறந்த தினம்.

வழமைபோல டில்லியிலுள்ள காந்தி சமாதிக்குச் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மாநிலத் தலைநகர்களிலும் மகாத்மா சிலைக்கு மலர்மாலை சூட்டினர். சில இடங்களில் நூல்யக்ஞமும் இடம்பெற்றது.

இனி மீண்டும் ஜனவரி முதலாம் திகதி காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தில் அவர் நினைவாக இதே இடங்களில் இதே நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இலங்கையிலும் காந்தியை மக்கள் சிலர் நினைவு கூரத் தவறமாட்டார்கள். 1948 ஆம் ஆண்டு ஜனவரி முப்பதாம் திகதி மாலை டில்லியில் காந்தி மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி, யாழ்ப்பாணத்தில் வானொலிப் பெட்டி வைத்திருந்தவர்களிடமிருந்து கேட்டறிந்ததும் கதறியழுதவர் பலர்.

வானொலிப் பெட்டி இருந்த வீடுகளுக்கு ஓடிச்சென்று அதன்முன்பாக மணிக்கணக்கில் அழுதபடி உட்கார்ந்திருந்த சிலரையும் நான் பார்த்திருக்கிறேன். மகாத்மா சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியைக் கேட்கத் தவறிவிட்டதற்குப் பரிகாரமாக வானொலிப் பெட்டிகள் வாங்கிய சிலரையும் நான் பார்த்திருக்கிறேன்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொழும்பில் கோலகலமாக, லண்டனிலிருந்து வந்த ஒரு கோமகனுடன் கொண்டாடப்பட்டபோது யாழ்ப்பாணம் உட்பட வடக்கும் கிழக்கும் காந்தி மகாத்மாவுக்காக கண்ணீர் வடித்தது.

ஒரு மாத முடிவில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட காந்தியின் அஸ்தியில் கொஞ்சத்தை பக்திபூர்வமாக அரியாலையில் வரவேற்று ஊர்த்தி பவனியாக பள்ளிக்கூடப் பிள்ளைகள் ரகுபதி ராகவ ராஜா ராம் பாடியபடி கீரிமலைக்கு எடுத்துச்சென்று கரைத்து அந்தியேட்டி செய்தோம்.

அஸ்தியைக் கரைக்க கீரிமலைக்குச் சென்ற பள்ளிப் பிள்ளைகள் பலர் பட்டினி கிடந்தும் காந்திக்கு அஞ்சலி செலுத்த நேர்ந்தது.

இலங்கை விடுதலை அடைந்த ஒரு வருட காலத்துக்குள் அதாவது 1949 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவழியினரான தோட்டத்தொழிலாளிகளான மலையகத் தமிழ்மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகள் பறிக்கப்பட்டது. இதை எதிர்த்து காந்தி காட்டிய வழியில் மலையகத் தலைவர்கள் கொழும்பில் செனட் சபை கட்டடத்தின் முன் சத்தியாக்கிரகம் செய்தபோது பொலிஸார் அவர்களை குண்டுக்கட்டாக தூக்கி பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச்சென்று பல மைல் தூரத்துக்கு அப்பால் இறக்கி நடந்துவரச் செய்தனர்.

இந்தக் காந்தீயப் போராட்டத்துக்கு காந்தியின் இந்தியா அனுதாபம் தெரிவித்துக் குரல் கொடுக்கவில்லை.

இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதனால், தமிழ் மக்களின் மொழி உரிமை பறிக்கப்படுவதுடன் வேலைவாய்ப்பு மற்றும் சகல உரிமைகளும் பறிக்கப்படுமென்று தமிழ்த் தலை வர்கள் குரல்கொடுத்தனர். சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் நாடாளுமன்றப் படிகளில் உண்ணாவிரதமிருந்து காந்தீய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தியபோது பொலிஸார் கண்முன்பாக குண்டர்களினால் அடித்து உதைத்துத் தாக்கப்பட்டனர்.

இதன்பின்னரும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் தங்கள் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் காந்தீய வழியில் அரச அலுவலகங்கள் முன் சாத்வீகப் போராட்டம் நடத்தியபோது ஆயுதப் படைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி மக்கள் எழுச்சியை அடக்கியபோது இந்தியா பேசாமல் மௌனம் சாதித்தது.

1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இலங்கை யில் ஆட்சியிலிருந்த அரசுகள் தமிழ் மக்களுக்கெதிராக கலகங்களைத் தூண்டிவிட்டு தமிழ் இனஅழிப்பை மேற்கொண்டன. 83 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு இலங்கை அகதிகள் போய்ச்சேர்ந்ததைத் தொடர்ந்து அன்றைய பிரதமர் இந்திராகாந்தி குரல் கொடுத்தார். அதையும் ஜே.ஆர். தமது சாதுரியத்தால் இந்திரா கொல்லப்படும்வரை காலம் கடத்தினார். பின்னர் தமது சாணக்கியத்தால் ராஜீவை மடக்கி அமைதி காக்கும் படையாக வந்த இந்திய இராணுவத்தையே தமிழர்க ளுக்கு எதிராகத் திருப்பிவிட்டார்.

இந்த ஜே.ஆரின் அயோக்கியத்தை எடுத்துக்காட்டி நியாயம்கோரி காந்தீய வழியில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து [illegible]ீபன் உயிர்விட்டபோது கூட இந்தியா துடித்துப் பதறவில்லை.

இன்றும் கூட இலங்கை தமிழ்மக்களின் நியாய நீதியான போராட்டத்தையும் தியாகத்தையும் இந்தியாவால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

ஐ.நாவில் பாகிஸ்தானின் நிரந்தரப் பிரதிநிதி கடந்த வாரம் ஆற்றிய உரையில் இலங்கைக்குப் பயங்கரவாதத்தைப் பழக்கிக்கொடுத்தது இந்தியாதான் என்று சொன்ன பின்னரும்கூட இந்தியா தனது தவறை உணர்ந்து கொள்ளுமா?

அகிம்சையை ஏற்றுமதி செய்ய வேண்டிய இந்தியா மனிதாபிமான உதவியாக ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் போது நீதி நியாயத்தை எப்படி உணரமுடியும்?

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

கெற்பேலி தரவை நாச்சிமார் கோவிலுக்கு மக்கள் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவம் அனுமதி வழங்க மறுத்துள்ளது. இக்கோயில் இராணுவ வலயத்திற்கு வெளியே அமைந்துள்ளது.

இராணுவ வலயத்திற்கு அப்பால் உள்ள கோவிலில் சென்று வழிபாட்டுச் செல்லவே தடைவிதிக்கும் இராணுவம் வலயப் பகுதிக்குள் உள்ள தமது வதிவிடங்களுக்குள் சென்று மீளக் குடியேற அனுமதி மறுப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

வதிவிட உரிமை, வழிபாட்டு உரிமை, எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டு சமாதானம் குறித்துப் பேசுவது, என்ன அர்த்தம் இருக்கப் போகிறது?

எல்லாவற்றையும் விட மக்கள் குடியிருப்பு பகுதிகளை ஆக்கிரமித்துள்ள இராணுவம் அங்கெல்லாம் சிறுசிறு புத்தகோயில்களையும், அரச மரங்களையும் உருவாக்கி தமது வழிபாட்டு உரிமைகளைப் பாதுகாத்து பேணிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

"புத்தம் சரணம் கச்சாமிக்கு மட்டும் அனுமதி
ஆரோகராவுக்கு அனுமதியில்லை...." என்கிறார் ஒரு பக்தன்.

-தெருவாசி

# புலிகளின் யோசனை வெளிவராத நிலையில் அதற்கெதிராக குரல் கொடுப்பது நியாயமற்றது!

## அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகசபை பற்றிய விடுதலைப் புலிகளின் யோசனைகள் வெளிவராத நிலையில், அதற்கெதிராகக் குரல் கொடுப்பது நியாயமற்ற செயல என்று நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் என்னவென்பது தனக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் தெரியாத நிலையில், அதைப் பெரிதுபடுத்தி திசைதிருப்ப முற்படுவது நியாயமற்றது என்றும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ வாகனம் மோதி...

வாகனத்தை தீயிட்டு எரிக்க முயற்சித்தனர். இதன்போது பொலிஸார் மக்களை தடுக்க முற்பட்டனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் இராணுவ வாகனத்தின் மீது கற்களை வீசி தடிகளால் தாக்கி வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொருக்கினர்.

### இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல்

இதனால், ஆத்திரமடைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் மக்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி மக்களை அடித்து அந்தப் பகுதியிலிருந்து விலக்குவதற்கு முயற்சித்தனர். அத்துடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

### படையினர் குவிப்பு

சிவில் உடையில் நிலைமைகளை அவதானித்துக்கொண்டிருந்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மீதும் பொதுமக்கள் கற்களை வீசினர்.

இவர்களின் இந்தத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினரும், பொலிஸாரும், பீல்பைக் இராணுவத்தினரை சம்பவ இடத்திற்கு அழைத்தனர். அவர்கள் வந்தும் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியவில்லை.

### மக்கள் அவதி

இதேவேளை, சம்பவ இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், என்பவற்றை பொலிஸார் வாகனங்களில் ஏற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். இதனால் தூர இடங்களுக்குச் செல்லவேண்டியவர்கள் செய்வதறியாது அங்கேயே நின்றதைக் காணமுடிந்தது.

இதேவேளை, சம்பவத்தின்போது வாகனத்தை ஓட்டிய இராணுவ சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

### புலிகள் மீது தாக்குதல்

இராணுவத்தினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை தணிப்பதற்காக சென்ற விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மீது இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, அந்த இடத்துக்குச் சென்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவம் இடத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டிருந்தனர். மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தணிப்பதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டபோதும் முயற்சி பலனளிக்கவில்லை.

### கண்காணிப்புக்குழுவினர் தலையீடு

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு சென்றிருந்த கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இராணுவத்தினருக்கும். மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருமாறு கோரினர்.

இதனையடுத்து சம்பவம் இடத்திற்கு கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சென்று இராணுவ அதிகாரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடினர்

### படைத்தரப்பு மறுப்பு

இதன்போது - மக்களுடன் கலந்துரையாடி அமைதியைப் பேணுமாறு விடுதலைப் புலிகளும், கண்காணிப்புக்குழுவினரும் கோரியிருந்தனர்.

இதன்போது அங்குள்ள நிலைமையை அவதானித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இராணுவத்தினரின் நடவடிக்கை மக்களை ஆத்திரமடையச் செய்வதாகவும், எனவே - நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ள படையினரை அங்கிருந்து அகலுமாறும் காவலரணிலுள்ளவர்களை தற்காலிகமாக வெளியேறுமாறும் கோரினர். அதற்கு படைத்தரப்பினர் மறுப்புத் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சிறுதூரத்தில் திரண்டிருந்த மக்களுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடிக் கொண்டிருந்தவேளை, மக்களை தடுத்து நிறுத்துவதற்காக நின்றிருந்த படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனையடுத்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் அங்கிருந்த கண்காணிப்பக் குழுவிடமும் பொலிஸாருக்கும் தெரிவித்துவிட்டு திரும்பியுள்ளனர். (11)

## போரினால் பாதிப்படைந்த

# சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாம் நேற்று கிளிநொச்சியில் திறந்துவைப்பு!



யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடைமுறைப்படுத்தும் - போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாம், நேற்று கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி, சமாதான செயலக உப தலைவர் டொக்டர் குணரட்ண, யுனிசெப் தெற்காசிய பிராந்திய அதிகாரி ரெட் செய்பன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் - கிளிநொச்சி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழக நடைமுறைப்படுத்தல் ஆலோசகர் நா.நரேந்திரன் வரவேற்புரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சமாதான செயலக உப தலைவர் டொக்டர் கனகரட்ன இடைத்தங்கல் முகாமின் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், கே.பி.ரெஜி மற்றும் குணரட்ன, யுனிசெப் பிரதிநிதி ரெட் செய்பன் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த இடைத்தங்கல் முகாமில் 50 சிறுவர்கள் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## இளைஞர் கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் கோஷ்டியொன்று நேற்றிரவு மதுபோதையில் தகாத வார்த்தைகளில் பேசியபோது, அவர்களை கலாசாரத்தைப் பேணும் குழுவினர் பிடித்து எச்சரிக்கை செய்த பின்னர் அனுப்பியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றிரவு யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

சுமார் இருபது பேர் அடங்கிய இளைஞர் குழுவினர், மதுபோதையில் நின்று - அந்த வழியால் சென்றவர்களை தகாதவார்த்தைகளால் பேசியதுடன், போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்துள்ளனர். அந்த இடத்திற்கு வந்த கலாசாரத்தைப் பேணும் குழுவினர், அவர்களைப் பிடித்து எச்சரிக்கை செய்த பின்னர் அனுப்பியுள்ளனர்.

## பல்கலை...

அயலவர்கள வீட்டினுள் சென்று பார்த்தபோதே உடல் முற்றாக எரிந்த நிலையில் கால்பகுதி மட்டும் அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதனையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் உடலின் பகுதிகளை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா...

கொண்டிருந்தது.

இந்த நிலையில், அமெரிக்கா மேலும் தடையை நீடிப்பதற்கு நியாய பூர்வமான எந்தக் காரணமும் இருக்கவில்லை என்பதைத்தான் நாங்கள் கூறிவைக்க விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

## கடற்படை...

விகினியாகம - பன்னாலையைச் சேர்ந்த ய. நதிகா சிரோமி (வயது 21) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

விடுமுறை வழங்கப்படாமையே, இவரது தற்கொலைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## ஐ.தே.க...

யின் ஆரவைப் பெற்றுக்கொள்ளுமாறும், சந்திரிகா, உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இவ்வாறு ஆதரவும் போதாத காரணத்தால் ஆடும் கட்சியிலுள்ள அதிருப்தியாளர் களையும் ஒன்றிணைத்து அரசுக்கெதிரான நடவடிக்கையை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

CHEMISTRY
CENTER
Com - Maths
நேர்கோடு
புவியீர்ப்பு மையம்
வட்ட இயக்கம்
ஆரம்பம் – 05-10-2003 - 5.00 PM.
சனி, ஞாயிறு
9-11 AM, 5 -7 PM
By: N.RAJAN (சி/1638)

# மைக்ரோ அலைவரிசையை ஏற்படுத்த ரெலிகொம் நிறுவனம் நடவடிக்கை!

தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே மைக்ரோ அலைவரிசை தொடர்பை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா ரெலிக்கொம்மும், இந்தியாவின் பாரிய தொலைத்தொடர்பு நிறுவனமான பாரத் சஞ்சார் மைக்கொம் லிமிட்டெட்டும் இணையவுள்ளதாக, சிறிலங்கா ரெலிக்கொம் தலைவர் திலங்க சுமதிபால நேற்று தெரிவித்தார்.

ரெலிக்கொம் தலைவர் திலங்க சுமதிபாலவும், இந்தியக் கம்பனிகளின் தலைவர் ஹெர்தி பால்சிங்கும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த இணைப்பு அடுத்த ஆண்டு தொடக்கம் செயற்படும். இதன்மூலம் அபிவிருத்தி துறையில் இந்தியாவுடன் உறவு வலுப்படுத்தப்படும். இந்தியாவின் சஞ்சார் மைக்கொம் லிமிட்டெட் உலகில் 7 ஆவது பாரிய தொலைத்தொடர்பு கம்பனியாகும். இதற்கு 4 கோடி 39 லட்சம் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

இந்த இணைப்பானது உலகில் தொலைத்தொடர்பு அமைப்புகள் இலங்கை புகுவதற்கான நுழைவாயில் எனவும் சுமதிபால மேலும் தெரிவித்தார்.

# பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

## பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரையினை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை பொதுஜன ஐக்கிய முன்னணியை கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

பிரதமர் தனது உரையில் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த போர் நியாயமானது எனக் குறிப்பிட்டுள்ளதுடன்,

அவரது இந்தக் கூற்று ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்க அகௌரவத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இந்தியா, சீனா, ஜேர்மனி உட்பட பல்வேறு நாடுகள் ஈராக் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புகையிரத சேவை ஊழியர்களின் வேலைநிறுத்தம் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

புகையிரதசேவை ஊழியர்கள், நேற்று பிற்பகல் முதல் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

புகையிரத சேவைகள் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சம்பத் யாஸ்தே தெரிவித்தார்.

புகையிரத சேவை ஊழியர்களின் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தம், நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவுற்றபோதிலும், நேற்று நடைபெறவிருந்த 80 புகையிரத சேவைகள் ரத்துச்செய்யப்பட்டதாக, புகையிரத கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது.

12 புகையிரத எஞ்ஜின்கள் செயலிழக்கச் செய்யப்பட்டதுடன், புகையிரத சாரதிகள் உரிய நேரத்துக்கு சமுகமளிக்காதது காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில் புகையிரத திணைக்கள ஊழியர்கள் தமது வேலைநிறுத்தத்தை, நேற்று பிற்பகல் மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொலைபேசி குறியீட்டு இலக்கம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மோட்டோறோலா தொலைத்தொடர்பு குறியீட்டு இலக்கம் நேற்றிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் மோட்டோறோலா தொலைபேசியின் குறியீட்டு இலக்கம் 070 ஆக இருந்தது. நேற்றிலிருந்து அதன் குறியீடு 060-2 ஆக மாற்றப்பட்டுள்ளதாக, இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (52)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1552 திகதி: 03.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 5 | 6 | 0 | 6 | 8 | 5 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.